திரு. மி. வின்சென்ட்: நான் இன்னும் 2 மாதங்களில் திருமணம் செய்துகொள்ளப் போகிறேன்.

(இ) ஒத்திவைக்கப்பட்ட மருத்துவத்துறை சம்பந்தப்பட்ட வினுக்களை எடுத்துக்கொள்வது குறித்து.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, மருத்துவத் துறை சம்பந்தப்பட்ட கேள்விகள் 11-ஆம் தேதி இந்த அவையில் ஒத்திவைக்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: 11-ஆம் தேதி ஒத்திவைக்கப் பட்ட மருத்துவத்துறை சம்பந்தப்பட்ட கேள்விகள் என்னுடைய தொகுதியைப் பற்றிய கேள்விகள், அமைச்சர் அவர்கள் இல்லாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டது. இப்போது இந்தக் கூட்டத் தொடரும் முடிய இருக்கிற காரணத்தினுல் இந்தக் கூட்டத்தொடர் முடிவதற்குள் அதற்கு விடையளிக்க தாங்கள் ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலமைச்சர் அவர்கள் அவையில் இல்லை. அவர்கள் வந்த உடன் கேட்டுப் பதில் சொல்லுகிறேன்.

(ஈ) திருத்துறைப்பூண்டி அரிசன நலப் பள்ளியில் மாணவர் களுக்குத் தரப்பட்ட சாப்பாட்டுத் தட்டுகள் பற்றி எழுப்பப் பட்ட பிரச்னை உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பட்டிருக்கும் போது மேலதிகாரிகள் அப்பள்ளி ஆசிரியர்களை அச்சுறுத்துவதாக கூறப்படுவது குறித்து.

திரு. மா. மீனுட்சிசுந்தரம்: தலைவரவர்களே, நேற்றைய தினம் சட்டமன்றத்தில் திருத்துறைப்பூண்டி அரிசன நலப் பள்ளியில் மாணவர்களுக்குச் சாப்பாட்டுத் தட்டுகள் வழங்கியிருப் பதையும், அதில் எம். ஜி. ஆர். லதா என்று பெயர்கள் பொறிக்கப்பட்டு இருப்பதையும் குறிப்பிட்டு இங்கே தெரிவிக்கப் பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயிண்ட் ஆப் ஆர்டர் எதற்காக என்ற விவரத்திற்கு வாருங்கள்.

திரு. மா. மீனுட்சிசுந்தரம்: அந்த சம்பவத்தின் விளைவாக நேற்று மாவட்டத்தின் பெரிய அதிகாரிகள் அந்த திருத்துறைப் பூண்டி ஆசிரியர்களை அழைத்து இந்த மாதிரி தட்டுகள் அங்கே வழங்கப்படவில்லை, அந்தத் தட்டுகளைத் திரும்பத்தாருங்கள்